DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.

**OS.No. 6/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | D.W.1 | Caste | : | |
| Name | | Sarathapriya | Age | | |
| Father / Husband Name | : | D/o.Natarajan | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 02.02.2023

**முதல் விசாரணை:–**

நான் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். நீதிமன்ற சம்மன் பெற்று ஆஜராகி உள்ளேன். இவ்வழக்கு 1ம் பிரதிவாதி விஜயராணி என் அம்மா ஆவார். 3ம் பிரதிவாதி அபிராமி என் தங்கை ஆவார். 4ம் பிரதிவாதி பிரகதாம்பாள் என் தந்தை வழி பாட்டி ஆவார். இவ்வழக்கு வாதியை எனக்கு யாரென்று தெரியவில்லை. இந்த வழக்கு விவரம் என்னவென்று தெரியும். வாதியின்தந்தை முத்துராமன் நாயுடு என்பவரிடம் என் அம்மா கடன் வாங்கியதாக சொல்லி தான் இந்த வழக்கு தாக்கலாகி உள்ளது. என் தகப்பனார் 2005ல் இறந்து விட்டார். அவர் சாலை விபத்தில் இறந்து விட்டார். என் தகப்பனார் இறந்து விட்டதால் என் அம்மா வழி தாத்தா வீட்டாரும் என் அம்மா வழி தாத்தா இருவரும் எங்களை பராமரித்து வந்தார்கள். நாங்கள் படித்தது அரசு பள்ளி தான். எங்களுக்கு கடன் வாங்கக் கூடிய அளவிற்கு சூழ்நிலை ஏற்படவில்லை. நாங்கள் பள்ளிக்கூடம் படித்துக் கொண்டிருக்கும் போது வாதியிடம் கடன் வாங்கியதாக சொன்னார்கள். எங்களுடைய பள்ளி படிப்பிற்கும் கல்லூரி படிப்பிற்கும் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் படிப்பிற்காக கடன் வாங்கியதாக வழக்கில் சொல்லி இருப்பதால் அவ்வாறு எங்களது பள்ளி படிப்பிற்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை சொல்ல வேண்டியதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என் தாய் வழி மாமா முத்துகிருஷ்ணனின் நெருங்கிய நண்பர் தான் பொற் சரவணன் ஆவார். பொற்சரவணன் தான் எங்களிடம் நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள், எனக்கு தெரிந்தவர் இருக்கிறார் அவரிடம் சொல்லி உங்கள் கஷ்டத்திற்கு உதவி செய்கிறேன் என்று சொன்னார். அப்போது எழுதப்படாத நான்கு அல்லது ஐந்து வெள்ளை தாளில் என் அம்மாவிடம் பொற்சரவணன் கையொப்பம் பெற்றுக் கொண்டார். முத்துராமன் என்பவர் மூலமாக எங்களுக்கு உதவி செய்வதாக சொல்லி தான் எங்கள் வீட்டுபட்டாவை பொற்சரவணன் என் அம்மாவிடமிருந்து வாங்கி சென்றார். பொற்சரவணன் எங்களுக்கு உதவி செய்வதாக சொல்லிய உதவி என்பது, ஏதேனும் தொழில் ஆரம்பிப்பதற்காக உதவி செய்வதாக தான் சொன்னார். பின்னிட்டு முத்துராமனுக்கு உடல் நிலை சரியில்லை என சொல்லி பொற்சரவணன் எங்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. நாங்கள் பொற்சரவணனிடம் சொத்து ஆவணத்தை

வாங்கி சென்றீா்களே, தொழில் தொடங்க உதவி செய்யவில்லையே என்ன என்று கேட்டதற்கு, அவா், முத்துராமனுக்கு உடல் நிலை சரியில்லை என்று சொல்லி விட்டாா். அது முதல் இந்த விசயம் சம்பந்தமாக எங்களுக்கும் பொற்சரவணனுக்கும் எந்த தொடா்பும் இல்லை. பின்னிட்டு கொஞ்ச நாளில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லி எங்களுக்கு நீதிமன்றம் மூலம் அறிவிப்பு வந்தது என்று பெரியவா்கள் சொன்னாா்கள். பொற்சரவணனுடன் எங்களுடைய உறவினரான ஜெயபால் என்பவரும் தான் எங்கள் வீட்டிற்கு வந்து மேற்படி வெற்று தாள்களில் என் அம்மாவிடம் கையொப்பம் பெற்று பட்டாவை வாங்கிச் சென்றாா்கள். எங்களுக்கு இருப்பது இந்த ஒரு வீடு மட்டும் தான். அந்த வீட்டைப் பொறுத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறாா்கள்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :– **ஒத்தி வைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*